முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2024 ம் வருடம் நவம்பர் மாதம் 13 ம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 – ஸ்ரீ குரோதி வருடம் - ஐப்பசி திங்கள் 27 ம் நாள்)

இடைநிலை மனு எண்.25/2024
அசல் வழக்கு எண்.932/2015

K.V.சிவசண்முகம் ..மனுதாரர்/2 வது பிரதிவாதி

// எதிர் //

நவீனா ..எதிர்மனுதாரர்/வாதி

19.08.2024 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 8, விதி 1A(3) மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மனுவில் சொல்ப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 04.11.2024 ம்தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.S.பழனிவேலு, வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.P.ரமேஷ், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 8 விதி 1A(3) மற்றும் பிரிவு 151 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம்:

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2 வது பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கினை இந்த மனுதாரர் மற்றும்

பலருக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்த மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்கு 11.06.2024 ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 7, 9 முதல் 13 வரையான ஆவணங்கள் மனுதாரர் வீட்டில் பிற ஆவணங்களுடன் கலந்துவிட்டது என்றும், 8, 14 முதல் 20 வரையான ஆவணங்கள் மனுதாரருக்கு தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர் வழக்கினை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் என்றும், தற்போது தான் மனுதாரர் மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதால் காலதாமதமாக அந்த ஆவணங்களை தாக்கல் செய்வதை மண்ணித்து மனுதாரர் தரப்பு ஆவணங்களாக பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கூறி மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

3. எதிருரையின் சுருக்கம்:

மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கதக்கதல்ல என்றும், மனு விவரங்கள் அனைத்தும் தவறானது என்றும், மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்வதாக கூறுவது உண்மையல்ல என்றும், மேலும் அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்புடையது அல்ல என்றும், வழக்கினை காலம் கடத்துவதற்காக வேண்டுமென்ற தாக்கல் செய்திருப்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. பிரச்சினைக்குத் தீர்வு:

மனுதார் தரப்பில், மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2 வது பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கினை இந்த மனுதாரர் மற்றும் பலருக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், இந்த மனுதாரர் தரப்பு சாட்சியத்திற்கு 11.06.2024 ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 7, 9 முதல் 13 வரையான

ஆவணங்கள் மனுதாரர் வீட்டில் பிற ஆவணங்களுடன் கலந்துவிட்டது என்றும், 8, 14 முதல் 20 வரையான ஆவணங்கள் மனுதாரருக்கு தற்போது தான் கிடைக்கப்பட்டது என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர் வழக்கினை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் என்றும், தற்போது தான் இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றதால் காலதாமதமாக இந்த ஆவணங்களை தாக்கல் செய்வதை மண்ணித்து மனுதாரர் தரப்பு ஆவணங்களாக பெற்றுக்கொள்ளவேண்டுமென்று வாதிடப்பட்டுள்ளது.

5.2 எதிர்மனுதாரர் தரப்பில், மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்வதற்கு கூறும் காரணம் உண்மையல்ல என்றும், மேலும் அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்புடையது அல்ல என்றும், வழக்கினை காலம் கடத்துவதற்காக வேண்டுமென்ற இந்த மனு தாக்கல் செய்திருப்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிடப்பட்டுள்ளது.

5.3 மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போது அசல் வழக்கானது இந்த மனுதாரர்/2 வது பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த மனுதாரர்/2 வது பிரதிவாதி அசல் வழக்கில் பி.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு அவரது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுவதற்காக அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 2 வது பிரதிவாதியின் மகன் தான் எதிர்மனுதாரர்/வாதி ஆவார். இறந்துபோன 1 வது பிரதிவாதி வாரனாசி கவுண்டர் இந்த மனுதாரரின் தகப்பனார் ஆவார். எதிர்மனுதாரர்/வாதி பாகப்பிரிவினைக்காக அசல் வழக்கினை தாக்கல் செய்து இருக்கிறார். இம்மனுவுடன் கொடுக்கப்பட்டுள்ள 1 முதல் 7 ஆவணங்கள் 1 வது பிரதிவாதி வாரனாசி கவுண்டர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். மனுவில் கொடுக்கப்பட்டுள்ள 8 வது ஆவணம் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட ஆவணம் ஆகும். 8 முதல் 14, 17, 19 ஆவணங்கள் வாரனாசி கவுண்டர் பெயரில் உள்ள ஆவணங்கள் ஆகும். 15, 16, 18 ஆவணங்கள் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்கள் ஆகும். மனுவில் கொடுக்கப்பட்டுள்ள 1 முதல் 8 வரையிலான ஆவணங்கள்

வாரனாசி கவுண்டர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பதாலும், அவை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் என்பதாலும் 9 முதல் 13 வரையிலான ஆவணங்கள் 1 வது பிரதிவாதி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பதாலும் 14 முதல் 20 வரையிலான ஆவணங்கள் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பதாலும் அவற்றை மனுதாரர்/2 வது பிரதிவாதி தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் அந்த ஆவணங்கள் அசல் வழக்கினை இறுதியாகவும், முழுமையாக முடிவு செய்ய வசதியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 1 முதல் 20 வரையிலான மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களின் உண்மை தன்மையும் அவைகளின் செல்லும் தன்மையும் அசல் வழக்கின் விசாரணையின் இறுதியில் முடிவு செய்துகொள்ளலாம் என்ற அடிப்படையில் தற்போது அந்த ஆவணங்களை காலதாமதமாக மனுதாரர்/2 வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படுவதை மன்னித்து பெற்றுக்கொள்ளலாம் என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக இம்மனு செலவு தொகையின்றி அனுமதித்து மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பில் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024 ம் வருடம் நவம்பர் மாதம் 13 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2024.11.13 18:56:53 +0530

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

S VIJAY ALAGIRI
Digitally signed by S VIJAY ALAGIRI
Date: 2024.11.13 18:56:58 +0530

மு.கூ.சா.நீ., ஈரோடு.